செ.வெ.எண் : 52/ஆகஸ்ட் நாள் : 27.08.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## கடலாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.251.89 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப் பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் (26.08.2017) அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கடலாடி ஊராட்சி ஒன்றியம், ஒருவானேந்தல் கிராமத்தில் தமிழ்நாடு கிராமசாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.228.17/- இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேவர்குறிச்சி முதல் மாரந்தை வரையிலான சாலை அமைக்கும் பணிகளையும், அ.புனவாசல் ஊராட்சி அ.படுவானேந்தல் கிராமத்தில் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டும் திட்டத்தின் கீழ் தலா ரூ.12,000/- என மொத்தம் ரூ.24,000/- மதிப்பீட்டில் 2 பயனாளிகள் வீடுகளில் கட்டப்பட்டுள்ள தனிநபர் இல்லக் கழிப்பறையினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்பு கடுகுசந்தை கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகளுக்கு குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்கும் வகையில் ரூ.3.31 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக ஆழ்கிணறு அமைக்கும் பணிகளையும், தனிச்சயம் கிராமத்தில் ஆத்தோடை கண்மாயில் தாய்-2 திட்டத்தின் கீழ் ரூ.16.77 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.

அதன்பின்பு, ஏர்வாடி கிராமத்தில் பாரத பிரதமரின் வீடுகள் கட்டும் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு தலா ரூ.1,70,000/- என மொத்தம் ரூ.3,40,000/- மதிப்பில் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், பணிகளை துரிதமாக மேற்கொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் திருமதி.ஜி.சிவரானி, கடலாடி வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.உமுல் ஜாமியா, ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற்பொறியாளர், திரு.அழகேசன் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**